(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
முதலாம் தவணைப் பரீட்சை - 2024
National Field Work Centre, Thondaimanaru
1st Term Examination - 2024

கணக்கீடு
Accounting

Three Hours 10 Min

Gr. 12 (2025)

33 | T | I

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
- எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி I

01) பின்வரும் கூற்றுக்களில் நிதிக் கணக்கீடு தொடர்பில் சரியான கூற்றுக்கள் எவை?

(A) வரலாற்றுத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும்.

(B) உள்ளகப் பிரிவினர்களுக்கு மாத்திரம் தகவல்கள் வழங்கப்படும்.

(C) குறிப்பிட்ட கணக்காண்டு காலத்திற்கான தகவல்கள் ஒரு தடவை முன்வைக்கப்படும்.

(D) கணக்கீட்டு எண்ணக்கருக்கள்,நியமங்கள்,சட்டங்கள் பின்பற்றப்படும்

(1)ABD (2)AB (3) ABCD (4) BCD (5) ACD

(...........)

02) நிதிக் கணக்கீட்டின் செயன்முறைகளைக் கொண்டுள்ள தொகுதி எது?

(1) இனங்காணலும் அளவிடலும்,பதிவு செய்தல்,திட்டமிடல்,கட்டுப்படுத்தல்

(2) இனங்காணலும் அளவிடலும்,பதிவு செய்தல்,திட்டமிடல்,பகுப்பாய்வு செய்தல்

(3) இனங்காணலும் அளவிடலும்,பதிவு செய்தல்,வகைப்படுத்தல்,பொழிப்பாக்கல்,பகுப்பாய்வுசெய்தல்

(4) திட்டமிடல்,இனங்காணலும் அளவிடலும்,பதிவு செய்தல்,பகுப்பாய்வு செய்தல்

(5) பதிவு செய்தல்,வகைப்படுத்தல்,பொழிப்பாக்குதல், பகுப்பாய்வு செய்தல்

(...........)

03) கீழே தரப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப அக்கறை செலுத்தும் பிரிவினரின் ஒழுங்கு வரிசையாக அமைவது யாது?

(1) தொழில் பாதுகாப்பு காணப்படுகின்றதா?

(2) முதலீட்டுக்கு ஏற்ப திருப்திகரமான அனுகூலம் கிடைக்கின்றதா?

(3) உரியவாறு வரிகள் செலுத்தப்படுகின்றனவா?

(4) வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றனவா?

A - அரசு B - முகாமையாளர் C - ஊழியர் D - உரிமையாளர்

(1) DACB (2) CBAD (3) BCAD (4) CDAB (5) DCAB (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

04) இரு பிரிவினர்களுக்கிடையில் பரிமாற்றம் இடம் பெறுபவைகளில் பணத்தினால் அளவிடக் கூடியவைகள் பின்வருவனவற்றில் எவை?

A - வங்கியில் இருந்து ரூபா 100,000 கடன் பெறல்

B - வாடகையாக ரூபா 20000 செலுத்தப்படல்

C - தளபாடத் தேய்மானம் ரூபா 15000

D - இருப்பு சேதமடைந்த நட்டம் ரூபா 10000

E - காசு விற்பனைகள் ரூபா 75000

(1) A B C D (2) A C E (3) A B C D E (4) A B E (5) A B D

(...........)

05) பொதுப் பேரேட்டில் குறிப்பிட்ட நிதியாண்டு முடிவில் மூடப்படாது நிதிநிலைமைக் கூற்றிற்கு கொண்டு செல்லப்படும் மூலமாக கருதப்படுபவை எவை?

(1) சொத்துக்கள்,செலவுகள்,வருமானங்கள்

(2) வருமானங்கள்,செலவுகள்

(3) வருமானங்கள்,செலவுகள்,சொத்துக்கள்,பொறுப்புக்கள்,உரிமையாண்மை

(4) சொத்துக்கள்,பொறுப்புக்கள்,உரிமையாண்மை

(5) சொத்துக்கள், செலவுகள்,உரிமையாண்மை

❖ **6, 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

சந்துரு என்பவர் ரூ 200000 பட்டியல் விலை கொண்ட பொருட்களை 10% வியாபாரக் கழிவினை அனுமதித்த பின்னர் மேனகாவிற்கு 07-01-2024 இல் கடனுக்கு விற்பனை செய்துள்ளார். இப் பொருட்களின் கிரயம் ரூ 120000 ஆகும். 10-03-2024 இல் ரூபா 60000 விற்பனை விலையுடைய பொருட்கள் மேனகாவால் திருப்பி அனுப்பப்பட்டன. இவற்றின் கிரயம் ரூபா 40000 ஆகும் மேனகா தான் செலுத்தவேண்டிய மிகுதி தொகை முழுவதையும் 5% காசு கழிவினை பெற்று கொடுத்து தீர்த்தார்.

06) சந்துரு வணிகத்தில் இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்திய மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை

(1) பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு

(2) பட்டியல், வரவுத்தாள்

(3) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு

(4) பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு

(5) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு (...........)

07) மேனகா வியாபாரத்தில் இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்திய மூலப் பதிவேடுகளின் ஒழுங்கு வரிசை.

(1) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு

(2) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு

(3) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, பொது நாளேடு

(4) கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு

(5) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத்திரும்பல் நாளேடு, பொது நாளேடு (...........)

08) சந்துரு வணிகத்தின் மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் 31-01-2024 இல் முடிவடைந்த ஜனவரி மாதத்திற்கான உரிமையாண்மையின் தேறிய அதிகரிப்பு எவ்வளவு?

(1) ரூ.14000 (2) ரூ.13,000 (3) ரூ. 53000 (4) ரூ.34000 (5) ரூ.40000

(...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

09) நிறுவனம் ஒன்றில் காணப்பட்ட தகவல்கள் வருமாறு

	31-01-2024 இல் (ரூ 000)	01-01-2024 இல் (ரூ 000)
மூலதனம்	1300	1000
நிறுத்தி வைத்த வருவாய்	650	500

ஜனவரி மாத மேலதிக மூலதனம் ரூ 300000, பற்றுக்கள் ரூ100000 நிறுத்திவைத்த வருவாய் கணக்கில் வரவு வைக்கப்பட்டன (கழிக்கப்பட்டுள்ளது) ஜனவரி மாத தேறிய இலாபமும் 31-01-2024 இல் உள்ள தேறிய சொத்துக்கள் எவை?

	தேறிய இலாபம் (ரூ000)	தேறிய சொத்துக்கள் (ரூ000)
(1)	250	1950
(2)	150	1750
(3)	50	1850
(4)	150	1950
(5)	250	1750

(…….)

10) கணக்கீட்டுச் செயன்முறையில் காணப்படும் பின்வரும் படிமுறைகள் இடம் பெறும் சரியான ஒழுங்கு வரிசை எது?

A - பேரேட்டு கணக்குகளைச் சமப்படுத்துதல்

B- கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்களைத்தயாரித்தல்

C- கொடுக்கல் வாங்கல்களை மூலப்பதிவேடுகளில் பதிதல்

D- பரீட்சை மீதியைத் தயாரித்தல்.

E- நாட்குறிப்புப் பதிவுகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்.

(1) BCEAD (2) BCEDA (3) BCAED (4) CBDEA (5) CBEAD (...........)

❖ **11ம் 12ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ராமன் நிறுவனம் மோட்டார் வாகனங்களை வாங்கி விற்கும் வியாபார நிறுவனமாகும் 2024 ஜனவரி மாதம் இந்நிறுவனத்தில் இடம் பெற்றுள்ள கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் வருமாறு

1- ரூ 1600000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. (வியாபார நோக்கம்)

2- ரூ 400000 பெறுமதியான மோட்டார் வாகனங்கங்கள் நிறுவன பயன்பாட்டிற்காக கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.

3- ரூ 600000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் ரூ 800000 காசுக்கு விற்கப்பட்டன.

4- ஜனவரி மாத மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு ரூ 20000 ஆகும்

11) கொடுக்கல் வாங்கல் இலக்கம் 1,2,3,4 ஆகியவற்றைப் பதிவதற்கு பயன்படுத்தும் மூல ஏடுகளின் ஒழுங்கு வரிசை எது?

(1) கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசு பெறுவனவு நாளேடு,பொது நாளேடு

(2) பொது நாளேடு, பொது நாளேடு, காசு பெறுவனவு நாளேடு,பொது நாளேடு

(3) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசு பெறுவனவு நாளேடு,பொது நாளேடு

(4) காசு கொடுப்பனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசு பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு

(5) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, விற்பனை நாளேடு, பொது நாளேடு (……)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

12) பின்வரும் கணக்கீட்டு சமன்பாடுகளில் எது அனைத்து கொடுக்கல் வாங்கல்களினதும் 31-01-2024 இல் உள்ளவாறான தேறிய விளைவினைப் பிரதிபலிக்கின்றது.

	நடைமுறையல்லா சொத்துக்கள் (ரூ000)	+ நடைமுறைச் சொத்துக்கள் (ரூ000)	= பொறுப்புக்கள் (ரூ000)	+ உரிமையாண்மை (ரூ000)
(1)	+ 400	+ 1800	+ 2000	+ 200
(2)	+ 320	+ 1800	+ 2000	+ 120
(3)	+ 1400	+ 800	+ 2000	+ 200
(4)	+ 380	+ 1800	+ 2000	+ 180
(5)	+ 1330	+ 800	+ 2000	+ 130

(...........)

❖ **13ம் 14ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பின்பற்றுக.**

நிறுவனம் ஒன்றின் 31 மார்ச் 2024 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி 72000 ஆகவும் அத்திகதியில் உள்ள கடன்பட்டோர் பட்டியல் மீதி வேறு மீதியையும் காட்டியது. காரணங்கள் வருமாறு,

1. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ15000 ஆல் குறைத்து கூட்டப்பட்டிருந்தது.
2. நபர் ஒருவரின் உட்திரும்பல் ரூ1500 கடன்பட்டோர் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.
3. கொடுத்த கழிவான ரூ3000 கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
4. நபர் ஒருவரின் அறவிட முடியாக்கடன் 500 கடன்பட்டோர் பேரேட்டில் பதியப்பட்டிருந்தது. எனினும் பொதுப்பேரேட்டில் இது தொடர்பில் எவ்வித சீராக்கமும் செய்யப்படவில்லை.

13) 31.03.2024ல் திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

(1) ரூ 82,500 (2) ரூ 82,000 (3) ரூ 85,000
(4) ரூ 83,500 (5) ரூ 84,000 (...........)

14) மேற்கூறப்பட்ட வழுக்கள் சரி செய்ய முன்னர் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் (பட்டியல் மீதி) யாது?

(1) ரூ 71,000 (2) ரூ 80,500 (3) ரூ 82,000
(4) ரூ 86,000 (5) ரூ 85,000 (...........)

15) கணக்கு வைத்தலில் உரிமையாளரும் வணிகமும் வேறுபட்ட தனியான இரு அலகுகளாகக் கருதப்படும் என்பதை வலியுறுத்தும் எண்ணக்கரு யாது?

(1) பண அளவீட்டு (2) அட்டுறு (3) வணிக அலகுசார்
(4) தேறல் (5) பாதுகாப்பு (...........)

❖ **16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருரக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16) பொதுப்பேரேட்டில் வணிகம் ஒன்றினால் பராமரிக்கப்படும் பின்வரும் கணக்குகளிற்கான பொருத்தமான கணக்கு வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

கணக்கு வகை.

A - பெற்ற கழிவு ……………………………………………………………..
B - பற்றுக்கள் ……………………………………………………………..
C - விற்பனைத்திரும்பல் ……………………………………………………………..
D - திரண்ட தேய்மானம் ……………………………………………………………..

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

17) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் **"சரி"** எனவும் பிழையாயின் **"பிழை"** எனவும் குறிப்பிடுக.

A - பற்றுக்களும்,மேலதிக மூலதனமும் இல்லாத நிலையில் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இலாபம் ஆகும். …………………………………..

B - வங்கி மேலதிகப்பற்று காணப்படுமாயின் வங்கி கூற்று மீதி வரவு மீதியாக காணப்படும் …………………………………..

C - கணக்கீட்டின் உள்ளீடாக அமைவது நிதிக்கூற்றுக்கள் ஆகும் …………………………………..

D - காசு, மற்றும் காசோலைகள் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணம் பற்றுச்சீட்டு ஆகும். …………………………………..

18) மோட்டார் வாகன விற்பனை நிறுவனம் ஒன்றினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.

மூல ஆவணம்

A - கடனுக்கு மோட்டார்வான் கொள்வனவு ……………………………………………………..

B - கடனுக்கு மோட்டார்வான் விற்பனை ……………………………………………………..

C - நிறுவன பயன்பாட்டிற்கு கடனுக்கு மோட்டார்வான் கொள்வனவு ……………………………………………………..

D - பெற்ற வாடகை ……………………………………………………..

19) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் பதியும் போது கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி **அதிகரிக்குமா?** அல்லது **குறைவடையுமா?** என குறிப்பிடுக.

A - அறவிட முடியாக்கடன் ……………………………………………………..

B - கடன் விற்பனை ……………………………………………………..

C - எதிரீடு செய்தல் ……………………………………………………..

D - கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை மறுக்கப்பட்டமை ……………………………………………………..

20) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படைக் கணக்கீட்டு சமன்பாட்டில் பதியும் போது உரிமையாண்மை அதிகரிக்குமாயின் **"ஆம்"** எனவும் குறைவடையுமாயின் **"இல்லை"** எனவும் தேறிய தொகையுடன் குறிப்பிடுக.

	ஆம் / இல்லை	தொகை (ரூபா)
A - கடன்பட்டோரிடம் காசு பெறப்படும் போது ரூபா3000 கழிவு அனுமதித்தல்	____________	ரூ____________
B - அறவிடமுடியாக் கடன் ரூ150 பதிவிடல்	____________	ரூ____________
C - கடன்கொடுத்தோன் ஒருவரின் ரூ30000 மீதி 10% கழிவு பெற்று உரிமையாளர் சொந்த பணத்தில் செலுத்துதல்	____________	ரூ____________
D - ரூ40000 விற்பனை விலையுடைய பொருட்கள் உட்திருப்பப்படல் இதன் கிரயம் ரூ30000	____________	ரூ____________

21) பின்வரும் மாறிகளுக்குப் பொருத்தமான சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

A - கணக்கீட்டு நியமங்கள் ……………………………………………………..

B - தனிநபர் வாழ்க்கைப் போக்கு ……………………………………………………..

C - நாணய மாற்று வீதம் ……………………………………………………..

D - கணணித் தொழினுட்பம் ……………………………………………………..

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

22) வணிகம் ஒன்றின் 2024 ஜனவரி மாதம் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் வருமாறு,

	ரூபா 000
01-01-2024 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி	750
கடன்பட்டோரிடம் பெற்ற காசு	6500
கொடுத்த கழிவு	200
எதிர் தீர்த்தல்	500
உட்திரும்பல்	350
பதிவளித்த அறவிட முடியாகடன்	150
31-01-2024 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி	550

2024 ஜனவரீ மாத கடன் விற்பனை எவ்வளவு ரூபா(000) ____________________

❖ **23ம் 24ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

01-01-2024 இல் நிறுவனம் ஒன்றின் காசு கணக்கு மீதி ரூபா 7000 ஆக காணப்பட்டதுடன் வங்கி கூற்று மீதியும் வேறுபட்டிருக்கவில்லை.

ஜனவரி மாத காசு பெறுவனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 78000

காசு கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 63000

<u>ஜனவரி மாத வங்கி கூற்றில் இருந்தான தகவல்கள் வருமாறு</u>

மாற்றப்பட்ட காசோலைகள் ரூபா 60000

வசூலிக்கப்பட்ட காசோலைகள் ரூபா 70000

கடன்பட்டோரின் நேரடிவைப்புகள் ரூபா 15000

வங்கி அறவிட்ட நிலையான கட்டளை வாடகைக் கொடுப்பனவு ரூபா 5000

வங்கி வசூலித்த முதலீட்டு வருமானம் ரூபா 3200

வங்கி அறவீடுகள் ரூபா 300

23)

(அ) 31-01-2024 இல் திருத்த முன் காசு கணக்கு மீதி ரூபா ____________________

(ஆ) 31-01-2024 இல் திருத்திய காசு கணக்கு மீதி ரூபா ____________________

24)

(அ) 2024 ஜனவரி மாதத்தில் மாற்றப்படாத
காசோலைகளின் பெறுமதி ரூபா ____________________

(ஆ) வசூலிக்கப்படாத காசோலைகளின்
பெறுமதி ரூபா ____________________

(இ) 31-01-2024 இல் உள்ளவாறான
வங்கி கூற்றின்படி மீதி ரூபா ____________________

25) ஸ்ரீதேவி வணிகமொன்றின் 2024 ஜனவரிமாத சில்லறை காசு கட்டுநிதி தொடர்பான தகவல்கள் வருமாறு

01-01-2024 இல் சில்லறை காசு மீதி ரூபா 750

31-01-2024 இல் சில்லறை காசு மீதி ரூபா 900

01-01-2024 இல் கட்டுநிதி மீள் நிரப்பல் ரூபா 6250

(அ) ஜனவரி மாதம் செலவிடப்பட்ட சில்லறை செலவுகளின்
மொத்த தொகை எவ்வளவு ரூபா ____________________

(ஆ) பெப்ரவரி மாதம் கட்டுநிதி ரூபா 1000 ஆல்
அதிகரிக்கப்படுமாயின் 01-02-2024 இல்
மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு ரூபா ____________________ (25 x 4 = 100 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
முதலாம் தவணைப் பரீட்சை - 2024
National Field Work Centre, Thondaimanaru
1st Term Examination - 2024

கணக்கீடு
Accounting

Gr. 12 (2025)

33 | T | II

அறிவுறுத்தல்கள் :

- முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் மொத்தம் $(20 \times 5 = 100)$ 100 புள்ளிகள்.

பகுதி II

01) மாதவன் வணிகத்தின் 2024 ஜனவரி மாத தகவல்கள் வருமாறு

01-01-2024 இல் உள்ளவாறான மீதிகள்	(ரூ 000)
அலுவலக உபகரணங்கள்	4000
கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு	1200
காசு மீதி	2800
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு	600
மூலதன கணக்கு	?

2024 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் வருமாறு,

திகதி	விபரம்	(ரூ000)
01.01.2024	மூலதனமாக கொண்டு வந்த காசு	1350
02.01.2024	சந்தியாவிடம் கொள்வனவு	750
05.01.2024	விற்பனை	970
07.01.2024	மதனிடம் கொள்வனவு	1050
08.01.2024	சாலிக்கு விற்பனை	1350
10.01.2024	சந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்கள்	150
12.01.2024	வெண்பாவுக்கு விற்பனை	1450
15.01.2024	மதனுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்கள்	250
16.01.2024	சந்தியாவுக்கு கொடுத்த காசு	360
	பெற்ற கழிவு	40
17.01.2024	அலுவலக உபகரணம் கொள்வனவு	500
18.01.2024	சம்பளம் செலுத்தியது	270
19.01.2024	சாலி திருப்பி அனுப்பிய பண்டங்கள்	350
20.01.2024	பெற்ற தரகு வருமானம்	120
21.01.2024	வெண்பா திருப்பி அனுப்பிய பண்டங்கள்	300
22.01.2024	கொள்வனவு	450
23.01.2024	மதனுக்கு கொடுத்த காசு	470
	பெற்ற கழிவு	30

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

25.01.2024	உரிமையாளர் எடுப்பனவு செய்த காசு	70
26.01.2024	சாலியிடம் இருந்து பெற்ற காசு	740
	கொடுத்த கழிவு	60
28.01.2024	வங்கிகடன் பெற்றது	700
30.01.2024	வெண்பாவிடம் பெற்ற காசு	820
	கொடுத்த கழிவு	80

வேண்டப்படுவது:-

(அ) காசு பெறுவனவு நாளேடும், கொடுப்பனவு நாளேடும்

(ஆ) கொள்வனவு நாளேடும், விற்பனை நாளேடும்

(இ) வெளித்திரும்பல் நாளேடும், உட்திரும்பல் நாளேடும்

(ஈ) பொதுப் பேரேட்டில் அவசியமான பேரேட்டுக்கணக்குகள்

02) **"தீனா"** மொத்த வியாபார நிலையமானது பெறுமதிசேர் வரி(VAT) இற்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

பின்வரும் தகவல்கள் 2024 ஜனவரி மாதத்துடன் தொடர்புடைவையாகும்.

(1) 01-01-2024 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு

	(ரூபா000)
வியாபாரக் கடன்பட்டோர்	450
காசு	200
இருப்பு	350
வியாபார கடன்கொடுத்தோர்	360
VAT கட்டுப்பாட்டு கணக்கு(பொறுப்பு)	140

(2) 2024 ஜனவரி மாத கடன்பட்டோர், மற்றும் கடன்கொடுத்தோர் துணைப் பேரேட்டில் எடுக்கப்பட்ட அவை தொடர்பான தகவல்கள் வருமாறு,

(ரூபா 000)

வியாபார கடன்பட்டோர்	01.01.2024 இல் மீதி	விற்பனைகள் (15%VATஉட்பட)	காசு பெறுவனவு	அனுமதித்த கழிவு
பிரியா	200	920	720	80
ரமேஸ்	150	575	360	40
ராம்	100	690	450	50

வியாபார கடன்கொடுத்தோர்	01.01.2024 இல் மீதி	கொள்வனவுகள் (15%VATஉட்பட)	காசு கொடுப்பனவு	பெற்ற கழிவு
துசி	160	460	320	40
மோகன்	120	345	270	30
வினோ	80	230	180	20

(3) 2024 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஏனைய கொடுப்பனவுகள் வருமாறு,

✶ காசுக் கொள்வனவுகள் ரூபா 1035,000 [15% VAT உட்பட]

✶ காசு விற்பனைகள் ரூபா 1380,000 [15% VAT உட்பட]

✶ வாடகை செலுத்தியது ரூபா 460,000

✶ தளபாடங்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 400,000 [VAT ஐ புறக்கணிக்க]

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

Note:- திகதிகள் குறிப்பிடப்படவில்லை எனினும் மேற்படி அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் 2024 ஜனவரி மாதம் வெவ்வேறு திகதிகளில் இடம்பெற்றுள்ளன.

வேண்டப்படுவது:-

(1) 2024 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்

(I) காசுப் பெறுவனவு நாளேடு (II) காசுக் கொடுப்பனவு நாளேடு

(III) விற்பனை நாளேடு (IV) கொள்வனவு நாளேடு

(2) 2024 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்

(I) காசுக்கணக்கு (II) VAT கட்டுப்பாட்டு கணக்கு

(III) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (IV) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

03) **“ராகவன்”** தனியுடமை வணிகத்தின் 01-01-2024 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள்.

	“ரூ 000”
ஆதனம் பொறிமற்றும் உபகரணங்கள்	6000
இருப்பு	600
வியாபார வருமதிகள்	700
காசு	1000
வங்கி கடன்	1600
வியாபார கொடுக்குமதிகள்	150
உரிமையாண்மை	?

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது 2024 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

(1) உரிமையாளர் மேலதிக மூலதனமாக ரூ800,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் ரூ300,000 காசினையும் முதலீடு செய்தார்.

(2) ரூபா 600,000 கிரயமான பொருட்களை காசுக்கு கொள்வனவு செய்தார்.

(3) ரூபா 2400,000 கிரயமான பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தார்.

(4) 01.01.2024 இல் காணப்பட்ட வியாபார வருமதிகள் 10% காசுக் கழிவு அனுமதித்து மிகுதி காசு பெறப்பட்டது.

(5) ரூ2500,000 கிரயமான பொருட்கள் ரூபா 3500,000 இற்கு விற்கப்பட்டு ரூ 2000,000 காசு பெறப்பட்டது மிகுதி கடன் விற்பனையாகும்.

(6) ஜனவரி மாத வங்கி தவணைக் கட்டணம் ரூபா 200,000 செலுத்தப்பட்டது. இது ரூபா 60,000 வட்டியையும் உள்ளடக்கியுள்ளது.

(7) ரூபா 80,000 கிரயமான பொருட்களை உரிமையாளர் தனது சொந்தப் பாவனைக்காக எடுப்பனவு செய்துள்ளார்.

(8) ஜனவரி மாத ஊழியர் சம்பளமாக ரூபா 160,000 காசு செலுத்தப்பட்டது.

(9) இம்மாத கடன் விற்பனையில் ரூபா 280,000 விற்பனை பெறுமதியுடைய பொருட்கள் வாடிக்கையாளர் ஒருவரினால் திருப்பி அனுப்பப்பட்டன. இவற்றின் கிரயம் ரூபா 200,000 ஆகும்.

(10) ரூபா 1300,000 பெறுமதியான கடன் கொடுத்தோர் ஒருவரின் மீதியானது ரூபா 130,000 காசுக்கழிவு பெற்று தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(11) ரூபா 16,000 கிரயமான இருப்புக்கள் அழிவடைந்துள்ளன.

(12) ஜனவரி மாத ஆதனம் பொறி உபகரண பெறுமானத்தேய்வுக்கு ரூபா70,000 ஏற்பாடு செய்க.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது:-

1. மேலே இலக்கம் 1 தொடக்கம் 12 வரையுள்ள கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினை(பெறுமதியுடன்) கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டு மாதிரியைப் பயன்படுத்தி பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும் பெறுமதி குறைவடையுமாயின் (-) எனவும் அந்தந்த பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக.

மீதி/ கொடுக்கல் வாங்கல் இல.	சொத்துக்கள்				பொறுப்புக்கள்		உரிமையாண்மை
	ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	இருப்பு	வியாபார வருமதிகள்	காசு	வங்கி கடன்	வியாபார கொடுக்குமதிகள்	
01.01.2024 இல் மீதி							
1							
2							

(22 புள்ளிகள்)

2. 31-01-2024 இல் முடிவடையும் ஜனவரி மாத வருமானக் கூற்றினைத் தயார் செய்க.

(14 புள்ளிகள்)

3. தேறிய சொத்து அடிப்படையைப் பயன்படுத்தி 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான இலாபம் அல்லது நட்டம் கணிப்பிடுக.

(4 புள்ளிகள்)

04) “மாதவி” நிறுவனத்தின் 01.01.2024 இல் காசுக்கணக்கு மீதி ரூபா 35000 ஆக இருந்ததுடன் இத்திகதியில் வங்கிகூற்று மீதியும் வேறுபட்டிருக்கவில்லை என்பதுடன் மாற்றப்படாத, வசூலிக்கப்படாத காசோலைகள் எவையும் இருக்கவில்லை.

(1) 2024 ஜனவரி மாத காசு பெறுவனவு, கொடுப்பனவு நாளேட்டில் இருந்தான தகவல்கள் வருமாறு,

பெறுவனவு நாளேடு

திகதி	காசோலை இல	தொகை
5-1-24	12710	15000
7-1-24	15200	26500
15-1-24	17165	31000
25-1-24	22102	21500
30-1-24	07800	18000

கொடுப்பனவு நாளேடு

திகதி	காசோலை இல	தொகை
6-1-24	715	12300
10-1-24	716	18700
18-1-24	717	21500
22-1-24	718	8600
28-1-24	719	12400

(2) ஜனவரி - 31 இல் உள்ளவாறான வங்கிக்கூற்றில் இருந்தான தகவல்கள் வருமாறு,

வசூலிக்கப்பட்ட திகதி	காசோலை இலக்கம்
06.01.24	12710
10.01.24	15200
27.01.24	22102

மாற்றப்பட்ட திகதி	காசோலை இலக்கம்
08.01.24	715
20.01.24	717
25.01.24	718

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

திகதி	தொகை ரூபா	விபரம்
16.01.24	16000(காசோலை இல.1425)	கடன்பட்டோர் நேரடிவைப்பு
21.01.24	12500	வங்கி தவணைக் கட்டணம் செலுத்தியது.
26.01.24	15000	வசூலித்த முதலீட்டு வருமானம்
30.01.24	3200	வங்கி கட்டணம்
31.01.24	200	காசோலை புத்தக கட்டணம்

வேண்டப்படுவது:-

(1) 31.01.2024 இல் திருத்த முன் காசுக்கணக்கு மீதி எவ்வளவு?

(2) 2024 ஜனவரி மாத வங்கியால் அனுப்பப்பட்ட வங்கி கூற்றினை திகதியின்படி தயாரிக்குக.

(3) 31.01.2024 இல் திருத்திய காசுக்கணக்கு

(4) 2024.01.31 இல் வங்கி இணக்க கூற்று.

05) **"கேசவன்"** வணிகத்தின் 2024 ஜனவரி 31 இல் முடிவடைந்த மாதத்தில் மூல ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் தகவல்கள் வருமாறு,

காசு பெறுவனவு நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	கொடுத்த கழிவு	தொகை	கடன்பட்டோர்
11.1	சந்தியா	150	1850	1850
20.1	சுமதி	100	1650	1650
31.1	மாலதி	50	1250	1250
மொத்தம்		300	4750	4750

காசு கொடுப்பனவு நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	பெற்ற கழிவு	தொகை	கடன்கொடுத்தோர்
10.1	சாரங்கா	100	1300	1300
19.1	பூமா	80	920	920
29.1	வானதி	70	1120	1120
மொத்தம்		250	3340	3340

விற்பனை நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	தொகை
7.1	சந்தியா	2600
16.1	சுமதி	2400
26.1	மாலதி	2000
மொத்தம்		7500

கொள்வனவு நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	தொகை
5.1	சாரங்கா	2000
15.1	பூமா	1200
25.1	வானதி	1500
மொத்தம்		4700

உட்திரும்பல் நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	தொகை
9.1	சந்தியா	500
18.1	சுமதி	400
28.1	மாலதி	300
மொத்தம்		1200

வெளித்திரும்பல் நாளேடு (ரூ000)

திகதி	விபரம்	தொகை
8.1	சாரங்கா	300
17.1	பூமா	100
27.1	வானதி	200
மொத்தம்		800

01.01.2024 இல் கடன்பட்டோர் பேரேட்டில் காணப்பட்ட மீதிகள் ரூ000

சந்தியா	280
சுமதி	270
மாலதி	250
மொத்தம்	800

01.01.2024 இல் கடன்கொடுத்தோர் பேரேட்டில் காணப்பட்ட மீதிகள் ரூ000

சாரங்கா	160
பூமா	140
வானதி	100
மொத்தம்	400

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

31.01.2024 இல் கீழ்வரும் காரணங்களினால் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளும் பேரேட்டுக்கணக்கு மீதிகளின் மொத்தமும் வேறுபட்டிருந்தன.

கடன்பட்டோர் தொடர்பானது
1. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை கூட்டி கணக்கிடப்பட்டது.
2. சந்தியாவின் அறவிட முடியா கடன் தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் இடம் பெறவில்லை அதன் பெறுமதி ரூபா 50000 ஆகும்.
3. சுமதியின் உட்திரும்பல் ரூபா 350000 ஆகும் எனினும் மூல ஏட்டில் 400000 எனப் பதியப்பட்டுள்ளது.

கடன்கொடுத்தோர் தொடர்பானது
1. வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை கூட்டி கணக்கிடப்பட்டிருந்தது
2. வானதியின் பெற்ற கழிவு ரூபா 80000 எனினும் மூல ஏட்டில் 70000 எனப் பதியபட்டது
3. சாரங்காவின் கொள்வனவு ரூபா 1900000 ஆகும் எனினும் மூல ஏட்டில் தவறாக பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:-

(அ)

i. சீராக்க முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு?

ii. சீராக்க முன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு?

(ஆ)

i. சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு?

ii. சீராக்கிய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு?

(இ)

i. சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியையும் கடன்பட்டோர் பட்டியல் மீதியையும் இணக்க செய்யும் கூற்று?

ii. சீராக்கிய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியையும் கடன்கொடுத்தோர் பட்டியல் மீதியையும் இணக்க செய்யும் கூற்று?

06)

(அ) **"லக்ஷ்மி"** வணிகத்தின் 2024 ஜனவரி மாதம் இடம்பெற்ற சில்லறை செலவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு

திகதி	விபரம்	பெறுமதி
04.01.2024	அஞ்சல் செலவு	400
07.01.2024	எழுது கருவி	300
08.01.2024	துப்பரவாக்கல்	500
19.01.2024	தபால் செலவு	200
20.01.2024	துப்பரவாக்கல்	300
29.01.2024	எழுது கருவி	200
30.01.2024	வியாபார சென்மதியாளனுக்கு (அகிலா) கொடுத்தது	1000

<u>மேலதிக தகவல்கள்</u>

- ✶ 01.01.2024 இல் சில்லறைக்காசு மீதி ரூபா 1600 ஆகும்
- ✶ 01.01.2024 இல் சில்லறை காசாளனுக்கு வழங்கிய முற்பணம் ரூபா 2400 ஆகும்.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது:-

1. சில்லறை காசு கொடுப்பனவு நாளேட்டினைத் தயாரிக்குக.
2. சில்லறை காசு கணக்கு

(ஆ) **"உமா"** நிறுவனம் 31.01.2024 இல் தயாரித்த பரீட்சை மீதி சமப்படாது காணப்பட்டதால் வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு. பரீட்சை மீதி சமப்படுத்தப்பட்டது. பின்வரும் தவறுகளும் விடுபாடுகளும் வருமாறு,

1. உரிமையாளர் சொந்த தேவைக்கு எடுத்த பொருட்களின் கிரயம் ரூபா 3500 தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் இடம் பெறவில்லை.
2. வங்கிகடன் வட்டி ரூபா 600 செலுத்தப்பட்டு அது காசுக்கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
3. காசு பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 300 ஆல் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
4. பெற்ற கழிவு கணக்கின் மீதியான ரூபா 700 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.
5. விற்பனைத் திரும்பல் தொகை 400 விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:-

1) மேற்படி தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்.
2) தொங்கல் கணக்கு